# யாழ்ப்பாணப் புவியியலாளன்

# 2000-2001

## இதழ் 14-15

ஆலோசக ஆசிரியர்: **க. சுதாகர்.**
(B.A.Hons.(Jaf), M.A.(Col), Dip in GIS & RS (Dehradun)

ஆசிரியர்:- **ந. இராஜன்**

புவியியந் கழகம்,
புவியியந்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
2001

# சமூக- பொருளாதார அபிவிருத்தியில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பங்கு

# THE ROLE OF SAMURDHI PROGRAMME IN SOCIO-ECONOMIC DEVELOPMENT

திருமதி சுபாஜினி உதயராஜா

## அறிமுகம்

நாட்டில் உள்ள பிரதான கட்சிகள் தேர்தற் காலத்தின் போது அவ்வவ் கட்சிகளின் கொள்கைத் திட்டங்களையும், செயற்பாடுகளையும் தேர்தல் விஞ்ஞா பனத்தின் மூலம் நாட்டு மக்கள் மத்தியில் முன்வைக்கின்றன. இதனடிப்படையில் ஒன்றிலிருந்து ஒன்று வித்தியாசமாகவோ, வேறுபட்டதாகவோ திட்டங்கள் காணப்படலாம் இதற்கமைய 1994ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது பொதுஜன ஐக்கிய முன்னணியினரால் சமூக- பொருளாதார அபிவிருத்திக்காக குறிப்பாக வறுமை ஒழிப்பிற்காக சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் என்ற அம்சத்தை அதாவது தேர்தல் விஞ்ஞாபனத்தின் போது முன் வைத்தனர். இவ்வாறே 1989ம் ஆண்டுப் பொது தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியானது வறுமை ஒழிப்பிற்கு "ஜனசக்தி வேலைத்திட்டம்" என்பதை தேர்தல் விஞ்ஞாபனத்தின் போது முன்வைத்தது என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறு கட்சிகள் மேற்குறிப் பிட்டவாறான தேசிய திட்டங்களை நாட்டு மக்கள் நலன் கருதி முன் வைப்பதன் மூலம் எதிர்பார்ப்பது பலத்த மக்கள் ஆதரவைப் பெற்றுக் கொள்வதும் அதன் மூலம் தமது ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்வதுமே ஆகும். இதற்கமைய 1994ம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின் அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தல் விஞ்ஞாபனத்தின் போது முன்வைத்த சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான நகலினை 1995ம் ஆண்டு யூன் 16ம் திகதி ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்களின் தலைமையில் சர்வதேச பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

Mrs. Subagini Uthayarajah,
Lecturer,
Department of Geography.

## சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள்.

இலங்கை அரசாங்கமானது காலத்திற்கு காலம் பல சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அவற்றுள் வறுமை ஒழிப்புத் திட்டமும் ஒன்றாகும். இலங்கை அரசாங்கம் நடைமுறைப் படுத்தி உள்ள, நடைமுறைப் படுத்தி வருகின்ற சமூக, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் சில பின்வருமாறு.

- உணவு மானியத் திட்டம் -1942
- கிராம விஸ்தரிப்புத் திட்டம் -1935
- சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம் தொடக்கம் 1978 வரையான அரிசி மானியம்
- உணவு முத்திரைத் திட்டம் (1979 தொடக்கம்)
- குடியேற்றத் திட்டங்கள் -1930
- ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம். 1979
- ஜனசக்தித் திட்டம் - 1989
- சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் -1995

## சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம்

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டமானது 1989ம் ஆண்டு இலங்கை அரசினால் உருவாக்கப்பட்ட ஜனசக்தித் திட்டத்தின் தொடர்ச்சியே ஆகும். அரசாங்கம் ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் பெறுனரின் சொந்த வளங்களின் அடிப்படையில் வலுப்பெற்று சுயதொழில் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்தும் முயற்சியை மேற்கொண்டது.

ஏழைகளின் சமூக-பொருளாதார நிலைகளை உயாத்துவதற்கு அழுத்தம் கொடுப்பதாகவே சுதந்திரத்திற்குப் பிற்பட்ட ஒவ்வொரு அரசாங்கத்தின் கொள்கை வழியிலான ஊடுருவலும் இருந்து வந்துள்ளது. படிப்படியாக இது எமது அரசியல் கலாச்சாரத்தின் தவிர்க்க முடியாத அம்சமாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. ஸ்தாபனங்களின் பல்வேறு துணைத் துறைகளையும் சாந்த கொள்கை வகுப்பாளர்கள், நிர்வாகிகள், அரசியல் வாதிகள், கல்விமான்கள் ஆகியோர் ஏழைகளின் சமூக-பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக தொடர்ச்சியாக கொள்கைகளை வகுத்துள்ளனர். ஏழைகளுக்காக ஆக்கப்பட்ட எண்ணிறைந்த நிகழ்சித் திட்டங்களை வகுப்போரும் செயற்படுத்துவோரும் ஏழைகளை இனங் காணபதற்கும் வெவ்வேறு சுட்டிகளை பயன்படுத்தி உள்ளனர்.

## வறியோரை இனங்காண பயன்படுத்திய சுட்டிகள்

காணி உடமை, போசாக்கு மட்டம் குடும்ப வருமானம், ஊழியர் மட்டம், சமூக நலன்புரி வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் ஏதாவது ஒன்றை அடிப்படையாகக் கொண்டு இவர்கள் ஏழைகளை வரைவிலக்கணம் செய்துள்ளனர். குறிப்பாக ஒவ்வொரு நிகழ்சித் திட்டத்தன்மை அது அழுத்தம் கொடுக்கும் என்பவற்றைப் பொறுத்து வறுமைக்கு வேறுபட்ட அடிப்படைகளிலும் வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டம் இரு வருடங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் 2500 ரூபாவை உபகாரக் கொடுப்பனவாக வழங்கியது. பெறுனர்கள் 700 ரூபாவிற்குக் குறைவான மாதாந்த வருமானமுள்ள குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். இச் சலுகைக் கொடுப்பனவு இரு பாகங்களைக் கொண்டது.

I. நுகர்விற்காக மாதாந்தம் ரூ1458/= (இதில் ரூ. 1000 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் உணவுப்

பொருட்களை வாங்குவதற்கு செலவிடப்பட வேண்டும் மிகுதி ரூபா 458 கட்டப் பொருட்கள் முதலியவற்றை வாங்க வங்கியில் சேமிக்கப்பட வேண்டும்)

II. முதலீட்டுக் கூறு (மாதாந்தம் ரூ 1042) இது ரூ 25,000 ஆகும் வரையில் மாதாந்தம் வங்கியில் சேமிக்கப்பட்டு இரு வருட இறுதியில் சிறு தொழில் முயற்சிகளுக்காக அரச வங்கியால் வழங்கப்படும் கடனைப் பெற இது ஈடாக உபயோகப்படுத்தப்படுகிறது. எனினும் இக் கூறு செயற்படுத்தப்பட வில்லை.

ஜனசக்தி நிகழ்ச்சித்திட்டம் எல்லா உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் பதினொரு சுற்றுக்களில் ஒவ்வொரு சுற்றிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒரு பிரிவை தேர்ந்தெடுத்து அமுல்படுத்தப்பட்டது. பிரிவுத் தெரிவில் அதிக வீதாசாரத்தில் உணவு முத்திரை பெறுநர்கள் வாழும் பிரிவுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

தொழில்வாய்ப்புக்கள் உருவாகவும் வறியோரின் வருமானத்தை விருத்தி செய்யவும் உதவும் அரசாங்க சேமநல நிகழ்ச்சித் திட்டமொன்றிற்கு ஊடாக இச் சூழ் நிலையில் இருந்துமீட்சி பெறுவது மிக அவசியமானதென்பது தெளிவாகி யுள்ளது. ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டம், ஜனசக்தி நம்பிக்கை நிதியம் என்பவற்றின் மூலம் கற்றுக் கொண்ட பெறுமதி மிக்க பாடங்களின் மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தனது கொள்கைப் பிரகடனத்தில் முன் வைத்த வாக்குறுதி ஒன்றைச் செயற்படுத்தும் வகையில் சமூக பொருளாதார அபிவிருத்தியின் ஊடாக வறுமை ஒழிப்பினையும், கிராமிய அபிவிருத்தியையும் குறிக்கோளாகக் கொண்ட தேசிய அபிவிருத்தி திட்டமொன்றினை 1995ம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி ஆரம்பித்து வைத்தது. இத் திட்டத்தின் கீழ் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த பரந்தளவிலான தேசிய அபிவிருத்தித் திட்டமே "சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டமாகும்" பிரதேச செயலாளர் பிரிவினை எல்லையாகக் கொண்ட இத் திட்டம் நாடு பூராகவும் ஒரே காலத்தில் செயற்படும் வண்ணம் உருவாக்கப்பட்டது.

மனித சமூகத்தின் சிறப்பினையும் முன்னேற்றத்தையும் விபரிப்பதைப் பொருளாகக் கொண்ட இத்திட்டம் பொருளாதார, சமூக, அரசியல், பண்பாடு என்பவற்றின் அபிவிருத்தியையும் மேம்பாட்டினையும் கொண்டமைந்துள்ளது.

இலங்கையின் சனத் தொகையானது 2000ம் ஆண்டில் 20 மில்லியனுக்கும் அதிகமாகும். வருடாந்த சனத் தொகை அதிகரிப்பு 1.2% மாகக் காணப்பட்டது. நாட்டின் மொத்தச் சனத் தொகையில் 72.3% தினர் கிராமப் புறங்களிலும் 21.4% தினர் நகரப்புறங்களிலும், மிகுதியாகவுள்ள 6.3%தினர் தோட்டத் தொழிலாளர்களும் ஆவார்கள். மொத்த சனத் தொகையில் 65%-70% தினர் வறுமையில் வாடுவது புலப்படுவதுடன் மொத்த சனத் தொகையில் 25%-30% தினர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களாகவே காணப்படுகின்றர். இந்த வறிய மக்களில் 80% தினர் கிராமப் புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். என்பது இலங்கையின் பொருளாதார கட்டமைப்பில் மிகவும் விஷேசமான குணாம்சமாகும்.

எனவே இந்த வறுமையின் பிடியில் வாழும் மக்களுக்கு விமோசனம் அளிக்கக்கூடிய விதத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள ஒரு சுபீட்சத்திட்டமே சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டமாகும். நாட்டு மக்களில் 1,200,000 மக்கள் அளவில் நிவாரணம் பெறத் தகுதியான இத் திட்டமானது இளைஞர் விவகார விளையாட்டு கிராமிய அபிவிருத்தி அமைச்சினால் செயற்படுத்தப்படுகிறது.

## சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்கள்

சமுர்த்தி நிகழ்சித் திட்டம் வறிய குடும்பங்களிலுள்ள படித்த திறன் மிக்க இளைஞர், யுவதிகளை குடும்ப அபிவிருத்தி கிராமிய அபிவிருத்தி மற்றும் தேசிய அபிவிருத்தியின் பங்காளர்களாக ஆக்கிக் கொள்கின்றது. இலங்கையில் நிலவும் பிரதான சமூக, பொருளாதார சிக்கல்களை இல்லாது ஒழிப்பதை குறிக்கோளாகக் கொண்ட குடும்பத்தொகுதியை அடிப படையாக வைத்து அபிவிருத்தி திட்டத்தை வகுத்துக் கொள்வதோடு வருமானத்தையும், சமூக அந்தஸ்த்தையும் உயர்த்துவதன் மூலம் வறுமை ஒழிப்பில் 40%மான இளைஞர் யுவதிகள் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும், நிர்வாகத்திலும் நேரடியாகப் பங்குபற்று வதற்காக வேண்டி ஏறத்தாழ 23,000 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். இவர்களைப் பயிற்றுவிப் பதற்காக 1500 நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சமுர்த்தி திட்டமானது "சுபீட்ச நிவாரணத் திட்டம்" என்ற பதம் கொண்டும் விளக்கப் படுகின்றது. இத் திட்டத்தின் அடிப்படையில் வருமானத்தை மையமாக வைத்து பின்வருமாறு அவர்களுக்கான நிவாரண உதவிகளும் கிடைக்கப் பெற்றன. அதாவது ரூபா 1000/=ற்கு குறைந்த வருமானம் உடையவாகளுக்கு ரூபா 500/=ம் ரூபா 500/= க்கு குறநைந்த வருமான முடையவாகளுக்கு ரூபா 1000/= மும் மாதாந்த நிவாரணமாக வழங்கப்படும் இதற்கமைய நாட்டு மக்களில் 1,200,000 பேர் அளவில் நிவாரணம் பெறத் தகுதி பெற்று உள்ளனர். அரசாங்கமானது இத்திட்டத்திற்காக வேண்டி வருடாந்தம் 9 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது. இதனை உணவு முத்திரை நிவாரணத்தின் முன்னே ஒப்பிடுமிடத்து சிறந்ததாகவே கருதப்படுகின்றது இதனை அட்டவணை I காட்டுகிறது.

அட்டவணை I

**உணவு முத்திரை நிவாரணம் பெறும் குடும்பங்கள்**

| குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை | உணவுமுத்திரை பெறுமதி (ரூபா) | சுபீட்ச நிவாரணம் (ரூபா) | நிவாரண அதிகரிப்பு (ரூபா) |
|---|---|---|---|
| 1 | 30 | 100 | 70 |
| 2 | 60 | 200 | 140 |
| 3 | 90 | 500 | 410 |
| 4 | 120 | 500 | 380 |
| 5 | 150 | 500 | 350 |

*மூலம்: சமுர்த்தி வேலைத்திட்டம்*

இவ்வாறு கொடுக்கப்பட்ட நிவாரணத் தொகையில் ஒரு குறிப்பிட்ட தொகை சேமிப்பிற்காக ஒதுக்குவதுடன் மீதி நிவாரணத் தொகை பணமாகவும் பொருட்களாகவும், வழங்குவதற்கு இத் திட்டம் வழி வகுத்துள்ளது. இந்த விபரத்தினை அட்டவணைII விளக்குகின்றது.

அட்டவணை II

**நிவாரண விபரம்**

| நிவாரணத் தொகை (ரூபா) | கட்டாய சேமிப்பு (ரூபா) | நிவாரணம் பொருளாக(ரூபா) | நிவாரணம் பணமாக(ரூபா) |
|---|---|---|---|
| 500 | 100 | 200 | 200 |
| 1000 | 200 | 400 | 400 |

*மூலம்:சமுர்த்தி வேலைத்திட்டம்*

சுபீட்ச நிவாரண பயனுகரிகள் குடும்பங்களின் அங்கத்தவர்களுக்கு அவர்களது உணவுத் தேவைகளுக்கு மேலாக தேவைப்படுகின்ற ஏனைய தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பணம் கொடுப்பதுடன் அப்பணத்தை தேவையான. சந்தர்ப்பத்தில் தேவைக் கேற்ப பயன்படுத்துவதற்கும் அவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஜனசக்தி போல இரு வருடங்களுக்கு மட்டுமென வரையறுக்கப்படாமல் மக்களின் வறுமை நிலை ஒழிக்கப்படும் வரை நிவாரணம் வழங்குவதற்கு அமையவே "சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம்" அமைக்கப்பட்டுள்ளது. இது இதன் சிறப்பம்சமாகும். எனவே ஏழைக் குடும்பங்கள் மற்றவர்களில் தங்கியிராது சுயசக்தியுடன் உழைத்து நிரந்தர வருமானத்தைப் பெற்று சுய மரியாதையுடன் வாழும் நிலையை ஏற்படுத்துவதற்குரிய உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அவர்களுக்கு வழிவகை செய்யப்படும்.


## சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பயன்பாடுகள்

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின கருதுகோள் கிராமப் பகுதிகளில் சுய தொழில் வாய்ப்பை ஊக்குவிப்பதும் அவர்களது சொந்த உழைப்பைக் கொண்டே வறியோரின் வருவாயை அதிகரிப்பதுமாகும். நாடெங்கிலுமுள்ள 12, 093 கிராமசேவை அதிகாரி பிரிவுகளில் பொருத்தமான தகுதி வாய்ந்த பயன் பெறுநர்களை தெரிவுசெய்யவும் பொருத்தமான சுய தொழில் திட்டங்களை அடையாளம் காணவும் குடும்ப விபரக் கணிப்பு ஒன்றை மேற்கொள்வதற்கென 1996ம் ஆண்டு இறுதிவரை சுமார் 23, 338 சமுர்த்தி முன்னோடிகளும், 1459 சமுர்த்தி முகாமையாளர்களும் (84 தலைமையக முகாமையாளனர்கள் உட்பட) நியமிக்கப் பட்டுள்ளனர். அதே சமயம் உணவு முத்திரை மதிய போசன முத்திரை நிகழ்ச்சித் திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. உணவு முத்திரை பெறுவோர் சமுர்த்திக்குத் தகுதியுடையோராவர்.

1996 டிசம்பர் அளவில் 18 மாவட்டங்களின் மொத்த குடும்பங்களில் 50.94 சதவீதத்தை உள்ளடக்கும் 1,840,443 குடும்பங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டள்ளன (யாழ்ப்பாணம், மன்னார், முல்லலைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்கள் இதில் இடம் பெறவில்லை)

**சமுர்த்தி பயன்பெறுவோர்**

(மாவட்டத்திலுள்ள குடும்பங்களின் சதவீதமாக)




*மூலம்: பொருளியல் நோக்கு*

இம் மாவட்டங்களில் பெருந் தொகையான பயன் பெறுநர்கள் உள்ள மாவட்டங்களாவன, இரத்தினபுரி (69.4%) மொனராகலை (67.5%) குருநாகலை (65.9%) அம்பாந்தோட்டை (65.8%) மாத்தளை (64.4%)என்பனவாகும். மொத்த குடும்பங்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோரை உள்ளடக்கும் ஏனைய மாவட்டங்களாவன மாத்தறை (60.5%)அனுராதபுரம் (59.2%) கேகாலை (57.7%) புத்தளம் (57.7%) கண்டி (51.8%) என்பனவாகும். குறைந்த சதவீத பயன்பெறுநர்கள் உள்ள மாவட்டமாக கொழும்பு (23.5%) விளங்குகின்றது. இதனை பின்வரும் பட்டம் I காட்டுகின்றது.

அட்டவணை III

ஜனசக்தி, சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வருடாந்த ஒதுக்கீடு (ரூ. மில்லியன்)

| வருடம் | ஜனசக்தி | சமுர்த்தி |
|---|---|---|
| 1989 | 617 | |
| 1990 | 2,903 | |
| 19991 | 3,497 | |
| 1992 | 3,098 | |
| 1993 | 3,098 | |
| 1994 | 3,887 | |
| 1995 | 2,793 | 8,100 |

*மூலம்: பொருளியல் நோக்கு*

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தில் நலன் பெறும் குடும்பங்கள் தொடர்ந்து ஆறு மாத காலம் அவர்களுடைய வருமானம் 2000 ரூபாவிற்கு மேல் அதிகரித்துக் காணப்பட்டால் அல்லது ஆகக் குறைந்தது குடும்பத்தில் ஒருவருக்கேனும் தொழில் வாய்ப்புக் கிடைத்தால் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து வெளியேறுவர். 1996 டிசம்பர் அளவில் அரசாங்கம் வடக்கு, கிழக்கிலுள்ள மாவட்டங்களைத் தவிர்ந்த (அம்பாறை விதிவிலக்காக) சமுர்த்தி சேமநல நிகழ்ச்சித் திட்டத்தில் 1,471,640பயன்பெறு குடும்பங்களுக்கு 6, 789,3888,700 ரூபாய் வரை செலவிட்டுள்ளது. இது 1995 டிசம்பர் தொகையை விட 15.1% அதிகமாகும்.

மானியங்கள் நீங்கலாக ஒவ்வொரு கிராம சேவை அதிகாரி பிரிவிலிருந்தும் (சமுர்த்திப் பிரிவு) ஒரு சனசமூக அபிவிருத்தித்திட்டம் அமுல் நடத்தப்பட்டுள்ளது. அந்தப்பகுதியில் காணப்படும் வளங்களையும் அதன் சமூக அமைப்பையும் அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கிராம சேவை அதிகாரி பிரிவிலும் அமைக்கப்பட்டுள்ள சமுர்த்தி செயலணிப் பிரிவுகளால் நீர்ப்பாசனம், நீர்வழங்கல் பாதைகள் கட்டடங்கள் நிர்மாணிப்பு போன்ற சிறு அளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1995ம் ஆண்டில் 11,858 திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு 114,447,350 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 1996ல் ஆரம்பிக்கப்பட்ட 11,665 திட்டங்களில் 210,620,000 ரூபாய் செலவிடப்பட்டுள்ளதுடன் பெருமளவு தொகை குருநாகல் மாவட்டத்திற்கு (1995 இல் 16,421,782 ரூபாவும் 1996 இல் 30,659,492 ரூபாவும்) செலவிடப்பட்டுள்ளது. விவசாய உற்பத்திகளை அதிகரிக்கும் பொருட்டு மாதிரிப் பண்ணைகள் மலர் உற்பத்தி என்பவற்றிற்காக பசளை (கலவை) உற்பத்தி செய்யவும் விவசாய முகாமையாளர்களை பயிற்றுவிக்கவும் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் 45 இலட்சம் ரூபாவை திட்டங்களில் முதலீடு செய்துள்ளது.

இந் நிகழ்ச்சித் திட்டத்திலுள்ள கடன் திட்டத்தின் கீழ் 1996 டிசம்பர் வரையில் 40 பிரிவு செயலகங்கள் மூலம் பரீட்சார்த்த அடிப்படையில் 398 கடன் முன்னோடிகள் தெரிவு செய்யப்பட்டனர். அவாகளால் மொத்தம் 3,353,628 ரூபாய் பகிரப்பட்டள்ளதுடன் இவற்றில் மக்கள் வங்கியால் 1,641,151 ரூபாவும், இலங்கை வங்கியால் 1,712,477 ரூபாவும் வழங்கப்பட்டது. இத்திட்டத்ததின் வெற்றித் தன்மை மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் 1997ல் 40 பிரிவுச் செயலகங்களுக்கு மேலும் 400 முன்னோடிகள் நியமிக்கப்படவுள்ளனர். அரச

வங்கிகளால் பணம் கடனாக பெறப்பட்டு 1997ல் பயன் பெறுவோருக்கு உடனடிக் கடனாக வழங்க அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சமுர்த்தி அதிகார சபை திறைசேரியாலும் கட்டாய சேமிப்பு முதலீடுகள் மூலமும் நிதி அளிக்கப்பட்டது. 100,000 கடன்களை "சாசன"(SASANA) கடன் ததிட்டத்தின் கீழ் வழங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. 1996ல் 10கோடி ரூபாய் வழங்கப்பட்டதுடன் 1997ல் இத் தொகை ரூ30 கோடியாக அதிகரித்தது.. சமுர்த்தி வங்கி வேலைத்திட்டத்தின் கீழ் 1997ல் 251 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குமாக 753 சமுர்த்தி வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் 162 சமுர்த்தி வங்கிகளின் வேலைகள் 1997களிலே முடிவடைந்து விட்டன.

1998இன் இறுதியில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்திலுள்ள நன்மை பெறும் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 1,973,183 ஆக விளங்கியது. இதனை 1997 உடன் ஒப்பிடுகையில் சிறிதளவு குறைவாக காணப்பட்டது. இவ் வீழ்ச்சிக்குப் புதிதாக சேர்த்துக்கொள்ளப்படுவோரைக் கட்டுப் படுத்துவதன் மூலம் மொத்த எண்ணிக்கையை யதார்த்தமான ஒரு மட்டத்திற்கு கொண்டு வரும் பொருட்டு 1998இல் நடைமுறைப் படுத்திய கொள்கைகளும் தகுதியற்ற குடும்பங்கள் அகற்றப்பட்டமையுமே காரணங்களாகும்.

கடந்த நான்காண்டுகளில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் பாரிய வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டமாக வளர்ச்சியடைந்து பரந்தளவிலான நடவடிக்கைகளை கையாளுகின்றது. இது இப்பொழுது சாதாரணமானதொரு வருமானமாற்றல் திட்டத்திலிருந்து வங்கித் தொழில், காப்புறுதி, சேமிப்புக்கள் பயிற்சி உட்கட்டமைப்பு, அபிவிருத்தி மற்றும் சுயதொழில் வாய்ப்பு என்பவற்றை உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டமொன்றிற்கு மாற்றமடைந்துள்ளது. கொள்கை உருவாக்கம், மற்றும் சுய தொழில் வாய்ப்புகள் என்பவற்றை உள்ளடக்கிய மிகக் கூடியளவில் அனைத்தையும் உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டமொன்றிற்கு மாற்றமடைந்துள்ளது. கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறைப் படுத்தலுக்கு வசதியளித்தல் கண்காணித்தல் மற்றும் பெறுபேறுகளை அளவீடு செய்தல் என்பவற்றிற்காக சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நிறுவன ரீதியான வரைச் சட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சமுர்த்தி இளைஞர் அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கொள்கை உருவாக்கல்களுக்கு முக்கிய பொறுப்பாக உள்ளது. வறுமை நிவாரணத் திணைக்களம் இலங்கை சமுர்த்தி மேலாண்மைச் சபை மற்றும் சமுர்த்தி ஆணையாளர் நாயகத்ததின் திணைக்களம் ஆகிய ஏனைய மூன்று நிறுவனங்களும் சமுர்த்தி இளைஞர் அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் பணிப்புரையின் கீழ் தேசிய மட்டத்தில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாகவுள்ளன. மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட சமுர்த்தி அலுவலகங்கள் பிரதேச செயலகங்களிலுள்ள சமுர்த்தி அலுவலகங்கள், சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது மூன்றாவது நடைமுறைப் படுத்தல் கிளைகளாக தொழிற்பட்டன. சமுர்த்தி முகாமையாளரின் கீழ் தொழிற்படும் சமுர்த்தி வலய அலுவலகங்கள் நிறுவன ரீதியான அமைப்பின் நான்காவது மட்டமாகும், கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் தொழிற்படுகின்ற சமுர்த்தி பணிக்குழுக்கள் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஐந்தாவது மட்ட தொழிற்பாடாக செயற்படுகிறது.

1998 இன் இறுதியில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அடையாளம் காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்காக சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் 13,560 கிராம சேவையாளர் பிரிவுகளில் 21,257 சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது 6,667 நிரந்தர சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களையும் 841 நிரந்தர வேளாண்மை ஊக்குவிப்பாளர்களையும் உள்ளடக்கி இருந்தது.

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டமானது 1999இலும் தொடர்ந்ததுடன் ஏறத்தாழ இரண்டு மில்லியன் மக்களுக்கு நேரடியாக நன்மைகளை வழங்குகின்றது. ஆரம்ப இலக்கான 1.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை நாட்டிலுள்ள மொத்த குடும்பங்களிற்கு வகை கூறியது. இலங்கை மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 1996/97 இன்படி மாதமொன்றிற்கு ரூ. 3,700ற்கு குறைவாக வருமானம் பெறும் குடும்பங்களின் விகிதாசாரம் 20 சதவீதமாக இருந்தது.

1999இல் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டமானது வடமாகாணம் தவிர்ந்த அனைத்து மாவட்டங்களிலும் தொழிற்பட்டது. வட மாகாணத்தில் வவுனியா தெற்குப் பிரிவு செயலகத்தில் மட்டும் இந் நிகழ்ச்சித் திட்டம் தொழிற்பாட்டிலிருந்தது. 1999இல் யாழ் மாவட்டத்திற்கும் வவுனியா மாவட்டத்தின் எஞ்சிய பிரிவுகளுக்கும் இந் நிகழ்ச்சித திட்டத்தினை விரிவாக்க ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1999 இல் சமுர்த்தி வருமான துணை நிகழ்ச்சித் திட்டத்தில் மொத்தமாக 1,987,653 குடும்பங்கள் நேரடியாக நன்மைகளைப் பெற்றன. 1999 இல் சமுர்த்தி வருமான துணைநிகழ்ச்சித் திட்டத்ததிற்கான மொத்தச் செலவு ரூ 8,175 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும் 1999ல் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 154,1932 இடம் பெயர்ந்த குடும்பங்கள் ரூ. 1,694 மில்லியன் செலவினைக் கொண்ட உலர் உணவு பங்கீட்டு அட்டைகளை பெற்றிருந்தனர். மேலும் வறிய குடும்பங்களிலுள்ள பாலூட்டும் தாய்மார்களுக்கு மொத்தமாக 80,817 ஊட்டச் சத்து அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன. 1999 இல் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த செலவு ரூ.97 மில்லியனாக இருந்தது.

கட்டாய சேமிப்புத் திட்டத்தின் கீழ் 1999 இன் இறுதியில் ரூ 5.212 மில்லியன் கொண்ட தொகை சேமிக்கப்பட்டுள்ளது. அடிமட்டத்திலுள்ள சிறிய குடும்பங் களினூடாக சமுர்த்தி நன்மை பெறுனர்களைச் சேமிக்கத் தூண்டும் சமுர்த்தி சுயவிருப்பு சேமிப்புத் திட்டத்தின் கீழான சேமிப்புக்கள் 1999இன் இறுதியில் ரூ 401 மில்லியனாக விளங்கின. சமுர்த்தி சுயவிருப்பு சேமிப்புத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சேமிப்புக் குழுக்களின் எண்ணிக்கை 227,796 ஆகக் காணப்பட்டதுடன் இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,223,243 ஆக இருந்தது.

சமுர்த்தி நலன்புரி நிகழ்ச்சித்திட் டத்தில் நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக் கையையும் கொடைகளின் பெறுமதியையும் அட்டவணைIV காட்டுகின்றது.

1999 இல் சமுர்த்தி அபிவிருத்தி கொடுகடன் திட்டத்தின் கீழ் 74,283 கடன் ஏற்பாட்டாளர்களுக்கு ரூ 358 மில்லியன் தொகை வழங்கப்பட்டது. சமுர்த்தி நன்மை பெறுநர்கள் சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முயற்சிகளுக்கு நிதிகளைத் திரட்டுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கும் பொருட்டு மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பவற்றின் ஒத்துழைப்புடன் சமுர்த்தித் தொழில் முயற்சி அபிவிருத்தி செயற்றிட்டம் 1999 இலும் தொடர்ந்தது. 1999ல் சமுர்த்தி தொழில் முயற்சி அபிவிருத்தி செயற்றிட்டம் 2,174 கடன் பட்டவர்களுக்கு ரூ 63 மில்லியன் கொடுகடன்களை வழங்கியுள்ளது.

## சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் சிறப்பம்சங்கள்

இலங்கையில் நிலவும் பிரதான சமூக பொருளாதார பிரச்சினை எனக் கருதக் கூடிய

இது 6,667 நிரந்தர சமுர்த்தி ஊக்குவிப் பாளர்களையும் 841 நிரந்தர வேளாண்மை ஊக்குவிப்பாளர்களையும் உள்ளடக்கி இருந்தது.

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டமானது 1999இலும் தொடர்ந்ததுடன் ஏறத்தாழ இரண்டு மில்லியன் மக்களுக்கு நேரடியாக நன்மைகளை வழங்குகின்றது. ஆரம்ப இலக்கான 1.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை நாட்டிலுள்ள மொத்த குடும்பங்களிற்கு வகை கூறியது. இலங்கை மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 1996/97 இன்படி மாதமொன்றிற்கு ரூ. 3,700ற்கு குறைவாக வருமானம் பெறும் குடும்பங்களின் விகிதாசாரம் 20 சதவீதமாக இருந்தது.

1999இல் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டமானது வடமாகாணம் தவிர்ந்த அனைத்து மாவட்டங்களிலும் தொழிற்பட்டது. வட மாகாணத்தில் வவுனியா தெற்குப் பிரிவு செயலகத்தில் மட்டும் இந் நிகழ்ச்சித் திட்டம் தொழிற்பாட்டிலிருந்தது. 1999இல் யாழ் மாவட்டத்திற்கும் வவுனியா மாவட்டத்தின் எஞ்சிய பிரிவுகளுக்கும் இந் நிகழ்ச்சித திட்டத்தினை விரிவாக்க ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1999 இல் சமுர்த்தி வருமான துணை நிகழ்ச்சித் திட்டத்தில் மொத்தமாக 1,987,653 குடும்பங்கள் நேரடியாக நன்மைகளைப் பெற்றன. 1999 இல் சமுர்த்தி வருமான துணைநிகழ்ச்சித் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ 8,175 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும் 1999ல் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 154,1932 இடம் பெயர்ந்த குடும்பங்கள் ரூ. 1,694 மில்லியன் செலவினைக் கொண்ட உலர் உணவு பங்கீட்டு அட்டைகளை பெற்றிருந்தனர். மேலும் வறிய குடும்பங்களிலுள்ள பாலூட்டும் தாய்மார்களுக்கு மொத்தமாக 80,817 ஊட்டச் சத்து அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன. 1999 இல் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த செலவு ரூ.97 மில்லியனாக இருந்தது.

கட்டாய சேமிப்புத் திட்டத்தின் கீழ் 1999 இன் இறுதியில் ரூ 5.212 மில்லியன் கொண்ட தொகை சேமிக்கப்பட்டுள்ளது. அடிமட்டத்திலுள்ள சிறிய குடும்பங் களினூடாக சமுர்த்தி நன்மை பெறுனர்களைச் சேமிக்கத் தூண்டும் சமுர்த்தி சுயவிருப்பு சேமிப்புத் திட்டத்தின் கீழான சேமிப்புக்கள் 1999இன் இறுதியில் ரூ 401 மில்லியனாக விளங்கின. சமுர்த்தி சுயவிருப்பு சேமிப்புத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சேமிப்புக் குழுக்களின் எண்ணிக்கை 227,796 ஆகக் காணப்பட்டதுடன் இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,223,243 ஆக இருந்தது.

சமுர்த்தி நலன்புரி நிகழ்ச்சித்திட் டத்தில் நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக் கையையும் கொடைகளின் பெறுமதியையும் அட்டவணைIV காட்டுகின்றது.

1999 இல் சமுர்த்தி அபிவிருத்தி கொடுகடன் திட்டத்தின் கீழ் 74,283 கடன் ஏற்பாட்டாளர்களுக்கு ரூ 358 மில்லியன் தொகை வழங்கப்பட்டது. சமுர்த்தி நன்மை பெறுநர்கள் சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முயற்சிகளுக்கு நிதிகளைத் திரட்டுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கும் பொருட்டு மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பவற்றின் ஒத்துழைப்புடன் சமுர்த்தித் தொழில் முயற்சி அபிவிருத்தி செயற்றிட்டம் 1999 இலும் தொடர்ந்தது. 1999ல் சமுர்த்தி தொழில் முயற்சி அபிவிருத்தி செயற்றிட்டம் 2,174 கடன் பட்டவர்களுக்கு ரூ 63 மில்லியன் கொடுகடன்களை வழங்கியுள்ளது.

## சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் சிறப்பம்சங்கள்

இலங்கையில் நிலவும் பிரதான சமூக பொருளாதார பிரச்சினை எனக் கருதக் கூடிய

அட்டவணை IV

சமுர்த்தி நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் (அ)
நன்மைபெறும் குடும்பங்களின் எண்ணிக்கையும் கொடைகளின் பெறுமதியும். (1995-2000)

| பணக்கொடை | 1995 | | 1996 | | 1997 | | 1998 | | 1999 | | 2000 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொகை (ரூபா) | குடு. எண. | பெறுமதி. (ரூ.மில்) | குடு. எண் | பெறுமதி. (ரூ.மில்) | குடு.எண் | பெறுமதி. (ரூ.மில்) | குடு. எண் | பெறுமதி. (ரூ.மில்) | குடு. எண. | பெறுமதி. (ரூ. மில்) | குடு. எண. | பெறுமதி (ரூ. மில்) |
| சமுர்த்தி வருமான குறை நிரப்பு நிகழ்ச்சித் திட்டம் | | | | | | | | | | | | |
| ரூ. 1,000 | 35,430 | 425 | 24,843 | 298 | 17,913 | 215 | 14,359 | 172 | 12,043 | 145 | 10,516 | 126 |
| ரூ. 5,00 | 892,950 | 5,358 | 905,514 | 5,433 | 917,722 | 5,506 | 896,783 | 5,381 | 899,083 | 5,395 | 897,863 | 6285 |
| ரூ. 200 | 288,843 | 693 | 313,273 | 752 | 328,960 | 790 | 323,710 | 777 | 329,588 | 791 | 359,211 | 1132 |
| ரூ. 100 | 222,975 | 268 | 236,252 | 284 | 225,681 | 271 | 216,445 | 260 | 219,788 | 266 | 223,857 | 432 |
| ரூ. 250 | - | - | - | - | 567,353 | 1,702 | 521,886 | 1,566 | 527,009 | - | 521,856 | 1957 |
| ரூ.125 | - | - | - | - | - | - | - | - | 142 | - | 382 | 0.6 |
| மொத்தம் | 1,440,193 | 6,744 | 1,479,882 | 6,767 | 2,057,629 | 8,484 | 1,973,183 | 8,155 | 1,987,653 | 8175 | 2,013,685 | 9,938 |
| உலருணவு பங்கீட்டு நிகழ்ச்சித்திட்டம் ரூபா. 336 - 1260(ஆ) | 107,036 | 1,260 | 180,204 | 2,101 | 159,849 | 1,769 | 125,343 | 1,400 | 154,932 | 1,694 | 154,218 | 1,684 |
| ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டம் ரூபா. 100 | 32,183 | 40 | 66,509 | 80 | 66,908 | 80 | 81,225 | 97 | 80,718 | 97 | 83,575 | 138 |
| மொத்தத் தொகை | 1,579,417 | 8,043 | 1,726,595 | 8,947 | 2,284,386 | 10,333 | 2,179,751 | 9,652 | 2,223,305 | 9,966 | 2,251,478 | 11,760 |

அ. சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் 1995 யூன் தொடங்கப்பட்டது.
ஆ. 1999ன் இறுதியில் உள்ளவாறு.

*மூலம்: இலங்கை மத்தியவங்கி ஆண்டறிக்கை 2000*

நிலையினை இல்லாதொழிப்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்ட குடும்பத் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு குடும்பத் தொகுதியை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டத்தையும் பயன்படுத்திக் கொள்ளும் போது வருமானத்தையும், சமூக அந்தஸ்தையும் உயர்த்துவதன் மூலம் வறுமையை ஒழிப்பதற்கு நாட்டின் சனத்தொகையின் 100ற்கு 40%மான இளைஞர், யுவதிகள் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும், நிர்வாகத்திலும் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் வண்ணம் அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டமே "சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் சிறப்பம்சங்கள் பின்வருமாறு.

1. குடும்பமொன்றின் ஒழுங்குபடுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
2. இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவத்தை அளித்தல்.
3. முதியோர் பங்களிப்பு
4. குறைந்த வருமானமுடையவர்களை தெரிவு செய்து அவர்களுக்கான நிவாரணத்தைப் பெற்றுக் கொடுத்தலும் பொருளாதார நடவடிக்கைகளை நெறிப்படுத்தலும்.
5. பொருளாதார அபிவிருத்தியும் நலன்புரியும்.
6. பிரதேச வளங்களைப் பயன்படுத்துவதில் மிகுந்த அக்கறை கொள்ளுதல்.
7. பரவலாக உள்ள பல்வேறு கிராமிய அபிவிருத்தி திட்டங்களை ஒருங்கிணைப்பதும் மூலவளத்தை விரயம் செய்தலைக் குறைத்தலும்.
8. நிவாரணம் பெறாத சகல குடும்பங்களினதும் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்காக சமுர்த்தித் திட்டத்தை வகுத்தல்.
9. வறுமையை இனங்காணும் காரணிகளாக வருமானத்தைப் போன்று சொத்து நிலையும் கருத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வறுமையையும், அதற்கான நலன்புரிக் கொடுப்பனவுகளையும் தீர்மானிப்பது.
10. வறுமையை ஒழிப்பதற்காக பணத்தைப் பங்கிடுவதற்குப் பதிலாக குடும்பத்தினுடைய பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு தொழிநுட்ப அறிவு, தேவையான மூலதனம், ஆலோசனை, சந்தை வாய்ப்பு, மற்றும் ஒழுங்கான ஒரு வருமானத்தைப் பெற வழிவகைகளை ஏற்படுத்துதல்.
11. ஒழுங்கான சுயவேலைவாய்ப்பை ஏற்படுத்துவதன் மூலம் கிராம மட்ட வேலை வாய்ப்பிற்கு வழிகோலுதல்.
12. கிராம மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் விரிவாக்கமும், சந்தை வாய்ப்பு கூடுதலாகவுள்ள பொருட்களை உற்பத்தி செய்தலும்.
13. உயர்ந்த கல்வியறிவைக் கொண்ட குடும்பங்களின் உயர் உற்பத்தித் திறனை உள்நாட்டு, வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்ட முறையில் உற்பத்தியை ஊக்குவித்தல்.
14. உற்பத்தி, விநியோகம், சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், ஆகிய சகல பிரிவுகளும் உள்ளடங்கும் விதத்தில் கிராமிய அபிவிருத்தித் திட்ட வடிவமைப்பு ஒன்றைச் சேர்ப்பதன் மூலம் அத்திட்டங்களின் தனித்துவத்தை நிலை நிறுத்தல்.
15. இளைஞர் கழகங்கள் விளையாட்டுக் கழகங்கள், கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பனவற்றை சமுர்த்தி திட்டத்தின் செயற்பாடுகளுடன் ஒருங்கிணைத்தல்.
16. சமுர்த்தி திட்டத்திற்கு சிறப்பளிக்கத்தக்கதான ஒரு அடிப்படை கடமையை உருவாக்குவதற்காக "சமுர்த்தி வங்கியை" ஏற்படுத்தி கிராம மட்டத்தில் சேமிப்பை ஊக்குவிப்பதற்கு உறுதுணை செய்தல்.
17. இல்லாமையை அகற்றி புதிய அமைப்புக்களை உருவாக்குவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.
18. சமுர்த்தி மத்திய நிலையத்தினூடாக (சமுர்த்தி மையம்) ஊருக்கு ஒரு "மூலவள நிலையம்" ஒன்றை பெற்றுக் கொடுத்தல்.
19. தற்போதுள்ள விரிவாக்க சேவை

நிலையங்களைக் கிராம அபிவிருத்திக்கான துடிப்புமிக்க அமைப்புகளாக மாற்றியமைத்தல்.

20. அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களது அனுபவம், தொழினுட்ப அறிவு, ஆற்றல், முகாமைத்துவம், நிர்வாகம், திறமை ஆகியவற்றை சமுர்த்தி திட்டத்திற்காக பயன்படுத்திக் கொள்வதோடு அவற்றின் உதவியையும், பங்களிப்பையும் பெற்றுக் கொள்ளல்.

## முடிவுரை

கால மாற்றத்திற்கு அமைய கட்சிகள் தமது கொள்கைத் திட்டங்களை முன்வைப்பதன் மூலம் அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டதன் பின் மக்கள் மத்தியில் முன் வைக்கும் திட்டங்களும் வித்தியாசமாகும். இந்த வகையில் வறுமை ஒழிப்பிற்காக வேண்டி மக்கள் ஐக்கிய முன்னணி "சமுர்த்தி திட்டம்" என்பதையும் அதற்கு முன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் "ஜனசக்தித் திட்டம்" என்பதையும் அறிமுகப்படுத்தியது. நாட்டிலுள்ள மக்களில் அதிகமானவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதால் இவ்வாறான திட்டங்கள் ஒரு குறிப்பிட்ட அரசாங்கத்தின் கால எல்லைக்குள் நிறைவுபெற முடியாது என்பதும் வெளிப்படையான உண்மையாகும். இதற்கு சான்றாக நாம் "மானிய முறை" உணவு முத்திரைத்திட்டம்" போன்றவற்றின் செயற்பாட்டினையும், அதன் பங்களிப்பினையும் கண்டு கொள்வதன் மூலம் அறியலாம். குறிப்பாக மிக அண்மைக்காலத் திட்டமான "ஜனசக்தி திட்டத்தை" நாம் நோக்கின் இப்போது அது சமுதாயத்திடையே மங்கி மறைவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. எனவே இதன் வெற்றிக்கு ஆட்சி மாற்றங்கள் இடம் பெற்றாலும் இத் திட்டங்கள் நீண்ட கால திட்டங்களாக செயற்படுத்தப்பட வேண்டும். இத் திட்டத்தை 1970ற்கு முன்னர் இருந்த நிவாரணத் திட்டத்துடன் ஒப்பிடின் அடிப்படையில் நோக்கின் இதன் பயன்பாடுகளும் செலவீனங்களும் குறைவாகவே காணப்படுகின்றது. வாழ்க்கைச் செலவின் அடிப்படையில் இவ்வாறு குறைவானதாக அமையக் காரணம் நாட்டிற்கு உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களின் கட்டுப்பாடேயாகும். உதாரணமாக IMF, IBRD போன்றவற்றைக் குறிப்பிடலாம் எவ்வாறு இருப்பினும் இது ஒரு சிறந்த திட்டம் என்ற அடிப்படையில் இதன் வெற்றி சிறந்த முறையில் அமையப் பெற்ற முகாமைத்துவத்தினதும், நிர்வாகத்தினதும் கையிலே தங்கியுள்ளது எனக் குறிப்பிடலாம்.

## உசாத்துணை


- ஐந்து வருட சமூகப் பொருளாதார முன்னேற்றம் (1994-1999) யாழ்ப்பாண மாவட்டம், கண்காணிப்பு முன்னேற்ற மீளாய்வுப் பிரிவுத் திட்டச் செயற்படுததுகை பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு, கொள்கை ஆய்வு, தகவல் பிரிவு ஜனாதிபதி செயலகம், பக்கம் 54-56.
- பொருளியல் நோக்கு, (1996), நவம்பர்/டிசம்பர், பக்கம் 21-24.
- பொருளியல் நோக்கு, (1993), செப்ரெம்பர், பக்கம் 25-31.
- மார்க்கம், (1992), ஏப்பிரல், சமூக, பொருளியல், பண்பாட்டு ஆய்வுச் சுருக்கம் தொகுதி 1, இல 1.
- சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம், (1998), இலங்கை மத்திய வங்கி, பக்கம் 283.
- Central Bank Report , (1994, 1995, 1996, 1997, 1998, 1999, 2000), Central Bank, Colombo.